தமிழ்நாடு சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1972 டிசம்பர் 2.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 11 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) அறிவிப்புகள்.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களுக்கு அண்ணா தி.மு.க உறுப்பினர்களுடன் இடம் அளிக்கப்பட்டது குறித்து

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் எழுந்திருந்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. திரு கே. எம். சுப்பிரமணியம் தாம் அண்ணா தி.மு.க.-வில் சேர்ந்துள்ளதாகவும், ஆதலால் தமக்கு அந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுடன் இடம் அளிக்க வேண்டுமென்றும் கேட்டு ஒரு கடிதம். எனக்கு எழுதியிருக்கிறார்கள். இதேபோல அண்ணா தி.மு.க. அமைப்புச் செயலாளரிடமிருந்தும் ஒரு கடிதம் எனக்கு வந்துள்ளது. எனவே, திரு. கே எம். சுப்பிரமணியம் அவர்களுக்கு அண்ணா தி.மு.க. உறுப்பினர்களுடன் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) அரசினர் தீர்மானங்கள்.

(அ) வினா நேரத்தை நிறுத்திவைத்தல் குறித்து

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Mr. Speaker, Sir, I move—

'Under Rule 244 of the Assembly Rules, that Rule 22 be suspended and there will be no Question Hour to-day'.

MR. SPEAKER : Under what rule?

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Sir, under Rule 244 of the Assembly Rules, I move—

'That Rule 22 be suspended and there will be no Question Hour to-day.'